# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/08 - 2023 ජූලි මස 17 වැනි සඳුදා - 2023.07.17

*2341/08 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PB 4833 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் (என்எஸ்பிஎம்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக அது ஏற்றங்கீகரிக்கப்படுவதனால், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிய 2224/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II ஐ இக்கட்டளை மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன் :-*

1. அட்டவணை I இன் நிரல் I இல், "பொதுச் சுகாதாரத்தில் மற்றும் போஷணையில் சிறப்பு விஞ்ஞான இளமாணி" என்ற பட்டத்தின் பெயருக்குப் பதிலாக "போஷணையில் மற்றும் சுகாதாரத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி" என்ற பட்டத்தின் பெயரை இடுவதன் மூலமும் ; அத்துடன்:

2. அட்டவணை II இன் நிரல் II இல், காணப்படுகின்ற சுருக்கீடுகளுக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "பொதுச் சுகாதாரத்தில் மற்றும் போஷணையில் சிறப்பு விஞ்ஞான இளமாணி" என்ற பட்டத்தின் பெயருக்குப் பதிலாக முறையே பின்வரும் பட்டத்தின் பெயரையும் சுருக்கீடுகளையும் இடுவதன் மூலமும் :-

**அட்டவணை I**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| போஷணையில் மற்றும் சுகாதாரத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பீஎஸ்சீ சிறப்பு (போஷணையும் சுகாதாரமும்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 14.*

EOG *07-0158/ 1*

---

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் கொழும்பு 7, மலலசேக்கர மாவத்தையில் 30ஏ என்னும் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக அது ஏற்றங்கீகரிக்கப்படுவதனால், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 2 ஆந் திகதிய 2321/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II இனை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இலும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "பொது நிதி மேலாண்மையில் முதுமானி" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளை (SLQF மட்டம் 6) பூர்த்திசெய்த, தொழில் பகுப்பாய்வியலில் முகாமைத்துவ இளமாணி சிறப்பு தொடர்பிலும் குறைந்தபட்சம் 90 திறமைச் சித்திகளை (SLQF மட்டம் 5) தொழில் பகுப்பாய்வியலில் முகாமைத்துவ இளமாணி தொடர்பிலும், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அல்லது அதற்குச் சமமானதற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசீஏஎஸ்எல்) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்தாண்டு (5) மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| தொழில் பகுப்பாய்வியலில் முகாமைத்துவ இளமாணி சிறப்பு | பீஎம்ஜீர் சிறப்பு (தொழில் பகுப்பாய்வியல்) |
| தொழில் பகுப்பாய்வியலில் முகாமைத்துவ இளமாணி | பீஎம்ஜீர் (தொழில் பகுப்பாய்வியல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2023, யூலை 14.*

EOG *07-0158/ 2*

---

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு PV 9729 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய 2329/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II இனை, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இல் காணப்படும் "இரண்டாம் மொழியொன்றாக ஆங்கிலம் கற்பித்தலில் கல்வி கௌரவ இளமாணி" என்னும் பதிவையும் அதன் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்க்கும்போது, குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளை (SLQF மட்டம் 6) பூர்த்திசெய்த உயிரி மருத்துவ விஞ்ஞானங்களில் கௌரவ விஞ்ஞான கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானப் பாடத்துக்காக மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்தாண்டுகளுக்கு (5) ஒரு முறையான மீள் - மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை** II

| *நிரல் I*<br>*பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| உயிரி மருத்துவ விஞ்ஞானங்களில் கௌரவ இளமாணி | பிஎஸ்சி கௌரவ (உயிரி மருத்துவ விஞ்ஞானம்) |

கலாநிதி **சுரேன் ராகவன்** (பா. உ.),
உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 14.*

EOG *07-0158/ 3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.